# கருணை மழை பொழிந்த வள்ளல்



கீரிமலை

## யோகசுவாமி மகளிர் தவநிலையம்

●

புதிய சேர்ப்புடன் மீள் வெளியீடு:-

யோகசுவாமி குருகுல இல்லம்

செம்மணி வீதி, நல்லூர்.

1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கருணை மழை பொழிந்த வள்ளல்

ஆசிரியர் :
சைவப்புலவர், வித்துவான்
திரு. வ. செல்லையா

கீரிமலை யோகசுவாமி மகளிர் தவ நிலையம்
1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## சிவசங்கம வணக்கம்

சிவனோடொக்குந் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே. (திருமந்திரம்)

மைக்களமும் மான்மழுவும் வரதமுட னபயமுறு
மெய்கரமும் நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணும்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்.
(கந்தபுராணம்)

## திருத்தொண்டர் மலரடிகள் வழுத்தல் செய்வாம்

பொய்விரவு பவநீறு படப்புரிவெண்
டிருநீறு பூசிக் கண்டி
கையிரவு மணியினரா யஞ்செழுத்து
முணர்ந்து மனக் களங்க நீங்கி
மெய்விரவு மறைவரம்பி னிலை கடவா
தொழுகியருண் மேன்மை பூண்ட
மைவிரவு கண்டர் தொண்டர் மலரடிகள்
சிரத்திருத்தி வழுத்தல் செய்வாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

கீரிமலை யோகசுவாமி மகளிர் தவநிலையத்தை அறிமுகப் படுத்தி முன்னெடுக்க ஒரு நூல் எழுதி வெளியிடுவோம் என்று நினைத்தோம். அம்முயற்சியால் உந்தப்பட்டு ''என் வாழ்க்கையில் சிவயோக சுவாமிகள்'' என்ற நூலை எழுதினேன். அதில் என் வாழ்க்கை பெரிதாக இடம்பெற்றிருந்தது. அதனைப்பின்னர் அச்சிட்டு வெளியிடலாம் என வைத்துவிட்டு, யோகசுவாமியாரைப் பற்றிச் சிந்திக்கலானேன். அவரைப்பற்றி அறிஞர்கள் பலர் எழுதிய நூல்கள், கட்டுரைகளைப் படித்தேன். அத்தோடு அவர் மேற் பாடப்பட்ட பாடல்களையும் அவர்தம் நற்சிந்தனைகளையுங் கருத்தூன்றிப் படித்தேன். இந்நிலையிற் சுவாமிகளின் கருணைபற்றி என் கருத்தினுதித்தவற்றைத் தொகுத்து ஒரு கட்டுரையை வரைந்தேன். அதற்குக் ''கருணை மழை பொழிந்த வள்ளல்'' என்ற தலையங்கத்தை இட்டேன். அத்தோடு ''பெரியார் தரிசனம்'' என்ற கட்டுரையையும் எழுதினேன். இதிற் தொண்டர்கள் தான் பெரியவர்கள் என்று நிறுவி யோகசுவாமிகளும் அப்பாவும் அடிசார்ந்தார்களாகிய அடியார் வரிசையில் இடம் பெற்றிருப்பதை உணர்த்தினேன்.

மேலும் சுவாமிகளின் ஆக்கங்களிற் சிலவற்றைத் தொகுத்து அவற்றிற்குத் தனித்தனி தலையங்கமிட்டேன். இங்ஙனமாக ஒரு நூல் உருவாக வேண்டுமென்பது எனது நினைவு. இவற்றைக் காட்டி அணிந்துரை பெறச் சுவாமிகளைப்பற்றி ஒரு நூல் எழுதி வெளியிட்டுப் பாராட்டைப் பெற்ற சைவப் பெரியார் உயர்திரு. மு. வயிரமுத்து J.P அவர்களிடம் சென்றேன். (அவர் இன்று அமரராகி விட்டார்) அவர் அப்போது வயோதிபமடைந்து எதுவும் செய்ய முடியாத நிலையிலிருந்தார். அங்ஙனமிருந்தும் சுவாமியாரில் வைத்திருந்த ஆர்வத்தால் நூலின் கருத்தைச் சுருக்கமாக்க் கூறும்படி கேட்டார், நான் அதனைச் சுருக்கமாகக் கூறினேன். அப்பொழுது பெரியார் முகமலர்ந்து தலையசைத்து ஆமோதித்தார். அதனைத் திருப்தியாக ஏற்றுக்கொண்டு மீண்டேன்.

இந்நூலை வெளியிட யோகசுவாமி மகளிர் தவநிலையத் துறவி சுவாமி அம்மா பூரண ஆதரவு தந்துள்ளார். அவருக்கு எமது நன்றி. இந்நூலை வெளியிட நிதி தடையாக இருந்தபோது ஆரம்ப நிதியாக ஒருதொகையை முதலிற் தந்து தொடங்குக என்று ஆர்வங் கொள்ளவைத்த யாழ்ப்பாணம் சீனியர் ஒழுங்கை செம்மனச் செல்வியாகிய திருமதி கற்பகம் அம்மையாருக்கும் எனது நன்றி. இந்நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துப் பிரதியைப் பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்துதவிய மட்டுவில் திரு. ஆ. நடராசா ஓய்வு பெற்ற அதிபர் அவர்களுக்கு எமது நன்றி. நிதிவிஷயமாகவும், நூல் அச்சேற்றும் விஷயமாகவும் ஆக்கவூக்கந் தந்த திரு. வ. இரத்தினசபாபதி. யாழ். மஸ்கன்ஸ் லிமிட்டெட், சைவப்புலவர் திரு. சி. திருநாவுக்கரசு எக்கவுண்டன், திரு. த. சத்தியதாசன் N. C. T. லங்காசீமென்ற் லிமிட்டெட் என் போருக்கும் எனது நன்றி. அச்சுப்பதிப்பை ஒப்பிட்டு நோக்கித்திருத்தி யுதவிய சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி உப அதிபர் அவர்களுக்கு எனது நன்றி. குறுகிய காலத்தில் இந்நூலைச் சிறந்த முறையில் அச்சேற்றியுதவிய போஸ்கோ பதிப்பகத்தினருக்கும், பணியாளர்க்கும் எனது நன்றி.

இச்சிறுநூலைப் பெற்றுக் கீரிமலை யோகசுவாமி மகளிர் தவநிலையத்தின் வளர்ச்சிக்குக் கைகொடுத்து உதவுவோர் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

'மேழிவாசம்' இங்ஙனம்
சித்திரமேழி, வ. செல்லையா.
இளவாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை மழை பொழிந்த வள்ளல்

சிவயோக சுவாமிகள் கருக்கொண்ட காளமேகம். அதுவும் கருணை மழை பொழியும் காளமேகமாகக் காணப்பட்டார்.

காளமேகம் என்ற பெயரில் ஒரு புலவர் இருந்தார். அவரோ என்றால் 'இம்மென்னுமுன்னே' எழுநூறு, எண்ணூறு பாடல்களைப் பாடி ''அம்மென்றால்'' ஆயிரம் பாட்டுக்களைப் பாடவல்லவர். எங்கள் சிவயோக சுவாமிகள் என்ற காளமேகம் கருக்கொண்டு வருஷித்தவையோ எண்ணிலடங்கா நற்சிந்தனைகள். இதனைக் கருணை மழையென்றல்லவா சொல்லவேண்டும். மழை போல் கைமாறு கருதாது ஈந்தவரை வள்ளல் என்றுதான் கூற வேண்டும். வள்ளல் என்றால் வரையாது வழங்குபவர் என்பது பொருள். கேளாதும் கேட்டதற்கும் மேலும் பொருட்களை அள்ளியள்ளி வழங்கியவரே வள்ளல். சிவயோக சுவாமிகள் நடமாடும் தெய்வமாக இருந்து கொண்டு ஆங்காங்கே நடமாடிக் கருணையைப் பொழிந்து வந்தார். அவர் வற்றாத ஊற்று. அருளை வரையாது வழங்கிய வள்ளல்.

இவ் வள்ளலாகிய மலரிலே தேன் குடிக்க வண்டுகள் பல பறந்தோடி வந்து தேன் பருகியுள்ளன. அமெரிக்கா (ஹாவாய்), இங்கிலாந்து, ஜேர்மனி முதலாம் இடங்களில் இருந்தல்லவா பாதமலரில் தேன் பருக வந்தார்கள். வந்தவர்கள் அதனை அமுதென அள்ளிப் பருகி வாழ்ந்து வருகின்றார்கள். அன்றியும் அன்னார் சிவயோக சுவாமிகள் உபதேசித்த வழி நின்று சைவச் செந்நெறியை ஆங்காங்கே நிறுவனம் அமைத்து வளர்க்கின்றார்கள். ஹாவாயில் ஸ்ரீ சுப்பிரமுனிய சாமியவர்களின் சைவப்பணி போற்றத்தக்கதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நாம் எல்லோரும் ''தண்டேனுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகங்கள்'' போன்று இருந்தோம் - இருந்தே விட்டோம்.

எப்படியும் சுவாமிகளின் கருணையைப் பெற வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. புத்தியுள்ள தந்தை தன் ஊதாரிப் பிள்ளைக்கு அன்புள்ளங் கொண்டு நிதி சேர்த்து ஓரிடத்தில் பக்குவமாக வைத்து அதனைப் பேணிக் காத்து வந்தார். தந்தை தன் மரணப் படுக்கையிலே மகனை அழைத்து, ''நீ வாழமுடியாது இறக்கும் போது எங்கேயாவது சென்று இறந்து விடாதே. தவறாது வீட்டுக்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ துலாந்தில் அப்பலகை மீது கயிறு ஒன்று போட்டிருக்கிறேன். அதில் தூங்கிச் சா'' என்று அன்புருகக் கூறிவிட்டு இறந்தார். மகன் தந்தையின் கடமைகளை நிறைவேற்றி விட்டு இருந்த கைப்பொருளோடு நண்பர்களுடன் சேர்ந்து யாவையும் செலவு செய்து விட்டான். தந்தை கூறியபடி வாழ முடியாது தற்கொலை செய்ய வேண்டிய நிலை வந்தது. அப்போது தந்தையார் கூறிய உபதேசம் அவன் நினைவுக்கு வந்தது. ஓடோடித் தற்கொலை செய்ய வீட்டுக்கு வந்தான். அங்கு அவனைத் தடுக்க யாரும் இருக்கவில்லை. தனி மனிதன் மரணம் யாருக்குத்தான் கவலை தரப் போகிறது! அவன் வீட்டைத் திறந்து உள்ளே சென்றான். துலாந்துப் பலகை மீது இருந்த கயிற்றில் தூங்கியபோது பலகை மெல்லியதாக இருந்ததால் முறிந்து விட்டது. என்னே அதிசயம்! தந்தையின் பணப் பொட்டணம் அவிழ்ந்து அவன் மீது பொன் மாரியெனச் சொரிந்தது. அப்பொழுது இறவாது நிலத்தில் விழுந்த அவன் பணத்தைக் கைகளால் அள்ளிக் கண்களில் ஒற்றித் தந்தையின் கருணையுள்ளத்தை நினைந்து கண்ணீர் சொரிந்து அழுதான். பின்னர் அவன் செந்நெறிப்பட்டு வாழ்ந்து வந்தான்.

இங்கு இக்கதையை நாம் நினைவு கூரவேண்டும். மகனிற் கருணையுள்ளம் வைத்து நிதி சேர்த்து வாழ்க்கையை வளம் பண்ணிய தந்தையைப் போன்று சுவாமிகளும் நம்மீது கொண்ட பெருங் கருணையால் நமக்கும் கருணை மழையைப் பொழிந்து விட்டுச் சென்றுள்ளார்கள். அவர் இறைவனோடு இருந்து தாம் வைத்துச் சென்ற புதையலைப் புசிக்கின்றார்களோ என்று பார்த்த வண்ணமிருக்கின்றார்.

> ''கள்ளத்திறைவர் துயர் கருதித்தாம் கருணை
> வெள்ளத் தலைவர் மிக''

என்பதற்கமைய எம்மை நோக்கிப் பார்த்தபடியேதானிருப்பார்கள். அவர் தேடித்தந்துவிட்டுச் சென்ற பொக்கிசங்கள் தான் என்ன? அதனைச் சிந்திக்க வேண்டாமோ? அவை நமக்கு அழியாத 'முதுசொம்'.

அவற்றில் முதலாவதாகக் கூறக் கூடியது நற்சிந்தனைகள். அவர் வழி நின்றோர் நற்சிந்தனைகளை நூலாக ஆக்கித்தந்துள்ளனர். அது வற்றாதவூற்றன்றோ? அதனை அள்ளி அள்ளிப் பருகி வாழ்க்கையை வளமாக்கலாமே?


இரண்டாவதாகவுள்ளது சிவதொண்டன் இதழ். இதில் எத்தனை எத்தனை அருட்கருத்துள்ள கருவூலங்கள். அவற்றினை ஏற்று மனங்கொண்டு நம் வாழ்க்கையை வளமாக்கலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது சிவதொண்டன் நிலையம் ஆகும். இது குரு, லிங்க, சங்கம வழிபாடுகளுக்கு ஏற்ற தலம் அன்றோ? அடியார் திருக் கூட்டத்தோடு திருவடிப் பூசைக்கு வழிவகுத்துத் தந்த குருமூர்த்தியாகிய சுவாமிகளை என்றும் மனத்திருத்தித் தொழுவோமாக.

இக்கட்டுரையைத் தனிப்புத்தகமாக வரையப் போதிய விஷயங்கள் உண்டு. இப்புத்தகம் கையடக்க நூலாக அச்சிடப்படுவதால் இதனைச் சுருக்கமாக எழுதுகின்றேன். சந்தர்ப்பம் வரும்போது விரிவாக எழுதும் எண்ணமுடையேன். இங்கு ஒரு விஷயத்தைக் கூறவிரும்புகின்றேன், சுவாமிகளின் நற்சிந்தனைகளும் அவர்களின் கருத்துக் கருவூலங்களும் என்றும் நிலைத்து நின்று மக்களுக்கு வழிகாட்டக் கூடியன என்பதே அதுவாகும். அத்துடன் அவை சர்வகலாசாலைப் பட்டப் பின் படிப்பு மாணவர்களுக்கு ஆய்வுக்குரியனவாகவும் அமைந்துள்ளன. இதனை அனைவரும் மனங்கொள்வாராக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியார் தரிசனம்

பெரியார் யார்? என்பது முதலில் எழும் வினாவாகிறது. படித்துப் பட்டம் பெற்றவர்கள் பெரியார் ஆகிவிடுவாரா? அன்றி உழைப்பால் உயர்ந்தவர்கள் என்று கருதப்பட்டவர்கள் எல்லாம் பெரியார் ஆகிவிட்டனரா? அதுதான் இல்லை. பணம் படைத்தவர்கள் பெரியார் ஆகிவிடுவாரா? இது சிந்தனைக்குரிய வினாத்தான்.

ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் தன்மையினராய், கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலில் விளங்கிய வித்தகச் செல்வர்களே பெரியார்கள். அவர்கள் எங்கே! நாங்கள் எங்கே! இடைவெளி மிக மிகப் பெரிது. திருத்தொண்டர் புராணம், பெரிய 'புராணம் என அழைக்கப்படுகிறது. இறைவனிடத்து இடையறாப் பேரன்பும், உளவாரத் திருப்பணியும் பூண்டவர்கள், இறவாத இன்ப அன்புவேண்டி நின்றவர்கள் அல்லவா பெரியவர்கள்! அவர்களது தரிசனத்தைப் பெறல் ஒன்றே நமக்கு வேண்டற்பாலது. தொண்டர்களாகிய அப்பெரியார்களின் உள்ளத்திலே இறைவன் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கிறான். இறைவனின் அருள் நோக்கம் அங்கிருந்தும் வெளிப்படுகிறது என்பது ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய சைவ வினாவிடையின் கருத்தாகும்.

இந்த வகையிலே ஈழத்துச் சிவனடியார் சித்தர் பரம்பரையில் அடங்குவர். சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையிலே 'அப்பாலும் அடிசார்ந்தார்க் கடியார்க்கும் அடியேன்' என்று கூறப்பட்டிருக்கிறதே! அதனையும் சிந்திக்க வேண்டும். 'பெரியார் கடையிற் சுவாமியார்' 'செல்லப்பாச் சுவாமியார்' 'சிவயோக சுவாமிகள், என்றிங்ஙனமாகத்திருத் தொண்டர்கள், சித்தர்கள், சிவனடியார் திருக்கூட்டம் ஈழத்திலும் பெருகிக் கொண்டே செல்லும். இவர்களது வாக்குகள் நமக்குப் பலன் செய்வன. தரிசனம் எல்லாவற்றிலும் மேலானது. அவர்களது உள்ளத்தில் எழுந்த நற்சிந்தனை என்னும் வற்றாத ஊற்று. நம்மை என்றும் வாழவைக்கும்.

அவர்கள், மற்றவர் கண்களுக்குப் பித்துப் பிடித்தவர்கள் போலத்தான் திரிவர். அந்நிலைவில் அவர்களை நாம் நோக்கும் போது அவர்களது நிலை நமக்குத் தரிசனமாகாது. பலனும் இல்லை. இது நல்ல சித்துருவென்று கண்டு அவர்களை அணுகில் நாம் உய்ந்தோம். கடைத்தேறுவோம். அதுவும் அவர்கள் மனங்கொள்ள வேண்டுமே. இல்லையேல் அவ்விடத்தில் அணுக முடியாதே. தரிசனமும் கிடையாதே· எனக்குக் கிடைத்த சிவயோக சுவாமிகளின் முதல் தரிசனம் அங்ஙனமாயிற்றே. தரிசன பலன் அற்றுத் திரும்பினேன். பின்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை தானேயாய் வந்து தண்ணளி புரிந்து ஆசீர்வதித்துச் சென்றார்களே! பெரியாரின் தரிசனம் என்பது சாமானியமானதன்று; இலகுவாகக் கிடைப்பது மன்று. இதனை நினைவிற் கொண்டு அவர்களது அருளாசிக்கு ஆளாக வேண்டும்.

முருகப் பெருமான் ஒரு சமயம் பெரியது எது என்று உலகத்துக்கு உணர்த்தத் திருவுள்ளங் கொண்டார். அதுவும் ஔவையார் மூலமே தெரிவிக்க விரும்பினார். அழகிய சிறுவனாக ஔவையாருக்குக் காட்சி கொடுத்து 'பாட்டியே! உலகத்தில் பெரியது எது? என்று கூறுவாய்' என்றார். கிழவி கேள்விக்கு பாட்டிலேயே விடை கூறினார் அதுதான் இது:

'பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமாலுந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடற்றுயின்றோன்
அலைகடலோ குறுமுனியங்கையிலடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறு மண்
புவியோ அரவினுக் கொரு தலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவனோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.'

இப்பாடலிலிருந்து பெரியவர் யாரென்று தெரிந்து கொள்ளலாம். அவர்களுடைய தரிசனம் எத்தகைய சிறப்புடையது என்றும் அறிந்து கொள்ளலாம். தொண்டர்களைச் சாதுக்களென்று அழைப்பதும் மரபாகவுள்ளது. சாதுக்களின் பெருமைகளை நாம் அறிதற்கு அரிது. அவர்கள் இறைவனை மனத்திலிருத்தி என்றுந் தியானத்திலே இருப்பவர்கள். அவர்கள் தரிசனத்தால் தாபம், வறுமை, பாவம் மூன்றும் ஒருவனை விட்டு அகன்றுவிடும். இதனை ரமணரிஷி ஒரு வெண்பாவில் பாடி வைத்துள்ளார்.

'தாபந் தண் சந்திரனால் தைனியம் நற்கற்பகத்தால்
பாபந்தான் கங்கையாற் பாறுமே - தாபமுதல்
இம்மூன்று மேகும் இணையில்லாச் சாதுக்கள்
அம்மா தரிசனத்தாற் றான்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோக சுவாமிகள் அருளிச்செய்த
## அருங்கனிகளிற் சில

திங்கட் சடையாய் எங்களை யுடையாய் சிவனே ஓம்
சீரிய அடியார் சிந்தையிலுறையும் செல்வா ஓம்
மங்கையை யுடையாய் மழவிடை யானே மாதவனே ஓம்
மண்ணும் விண்ணும் ஒன்றாய் விளங்கும் மணியே ஓம்
அங்கையி லங்கி தங்கிய பரனே அரனே ஓம்
ஆருயி ரெல்லாம் நீயே யாகி அமர்ந்தாய் ஓம்
கங்குலும் பகலும் இல்லாக் காட்சி தருவாய் ஓம்
கருதும் நல்ல அடியாரை என்றுங் காப்பாய் ஓம். 1.

(நற்சிந்தனை பக். 145)

ஒன்றெனக் கும்பிடுவாய் மனமே இந்த
உலகுயிர் பரமென ஒளிரும் மெய்ப்பொருளை
- ஒன்றெனக் கும்பிடுவாய்
உண்டில்லை என்றெவரும் ஓதமுடி யாததாய்
பண்டும் இன்றும் என்றும் அப்படி உள்ளதாய்
- ஒன்றெனக் கும்பிடுவாய்
நன்றுக்கும் தீதுக்கும் நடுவாய் உள்ளதாய்
ஞான யோக தியானத்தில் வருவதாய்
கன்றிய காமனைக் கண்ணால் எரித்ததாய்
கால காலனைக் காலால் உதைத்ததாய்
ஒன்றெனக் கும்பிடுவாய் 2

(நற்சிந்தனை. பக் 175)

நின்று மிருந்தும் நடந்தும் நினைமின்
பொன்று முடலைப் போற்றுத லொழிமின்
நன்றுதீ தெனும் நாட்டம் விடுமின்
அன்று மின்றும் என்று மான்மா
இருந்த படியே இருக்கும் சீரை
அருந்தவ யோக ரறிந்தாங் கறிந்து
தெளிந்து சிவன் முத்தராய் உலகில்
பொருந்தி வாழ்தல் போற்றுந் தகைத்து. 3

(நற்சிந்தனை பக். 23)

அல்லல் அற்று வாழவழி சொல்லு சிவமே
அகம் பிரமாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லார்க்கும் நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன் செயலாய்ச் சொல்லு சிவமே;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே. 4.
(நற்சிந்தனை)

உணர்ந்தார்க் குணர்வரிய ஓங்கார மெய்ப்பொருளை
கணந்தர்ன் மறவாமல் கைதொழுவர் என்மனமே
சித்தத்துள் இத்திக்கும் தெள்ளமுதைத் தெய்வத்தை
எத்திக்கும் போற்றுதற்கு என்பின்னே வாமனமே. 5.
(நற்சிந்தனை)

மந்திரமாய்த் தந்திரமாய் மருந்தாகி விருந்தாகி
எந்திரமாய் என்றுணையாய் எல்லாமாய் அல்லவுமாய்ச்
சந்திரனாய்ச் சூரியனாய்ச் சரமசரம் யாவுமாய்
எந்தைபிரா னிருந்தநிலை கண்டார்கள் பிறவாரே. 6.
(நற்சிந்தனை பக். 126)

பஞ்சப்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி 7.

செல்வர் பின் சென்று தினமலையாமல்
நல்வரந் தருவாய் ஞானிகள் நாட்டமே
சில்பக றோன்றிச் சிதையா வண்ணம்
எல்லையில் கால மென்றனுக்கருளி
ஓதுக அதுநலம் ஓம்தத் சத்ஓம் 8.

உள்ளத்தினுள்ளே யுலாவு மொருவனை
எள்ளத்தனையும் மறவா தேத்தினர்ல்
பள்ளத்தில் வீழ்ந்து பரதவியோமே
உள்ளத்தைச் சொன்னோ முயிர்த்துணை யிதுவே
ஓதுவது நாம் ஓம் தத் சத் ஓம் 9.
(நற்சிந்தனை பக். 173)

இப்பிறவி தீர்ப்பானை இனிப்பிறவா தருள்வானை
எப்பிறப்பும் என்னோடே யுடனாக இருந்தானை
ஒப்பிலா ஒருவனாய் ஊழியெல்லாம் நின்றானைச்
செப்புமவ ரினிப்பிறப்போ டிறப்பினையே சேராரே. 10)
(நற்சிந்தனை பக். 127 – 10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகளின் மணிவாக்குகளிற் சில

1) உலகம் ஒரு பெரும் விளையாட்டு. இதை இறைவன் லீலை என்பர். எல்லாம் விளையாட்டே. சும்மா இரு.
2) இன்பமும் துன்பமும், இகழும் புகழுமாக மாறிவரும். இவற்றைக் கண்டு அஞ்சப்படாது.
3) காலையில் ஐந்து மணிக்குத் தியானஞ் செய். சில விஷயங்கள் தெரியும்.
4) வணக்கம் மணக்க வேண்டும். வருகிறவர்கள் கண்டால் ஆச்சரியப்பட வேண்டும். வேலையும் பூசையே.
5) படியுங்கள். ஆனால் மனிதன் படிப்புக்கு அப்பாற்பட்டவன்.
6) பேசாதிருந்தால் அவரையறியலாம். துன்பம், வருத்தம் யாவும் நன்மைக்கே வருகின்றன. வேர்க்க வேண்டும். இல்லாவிட்டால் வருத்தம் வரும்.

## சுவாமிகள் தமது குருவைச் சந்தித்தபோது அவரால் கூறப்பட்ட மணிவாக்குகள்

1) 'ஆரடா நீ'
2) 'தேரடா உள்'
3) 'தீரடா பற்று'
4) 'ஆரென்று அறி நீ' — 'நீயே நான்'

## குருவின் உபதேசமாக அமைந்த மகாவாக்கியங்கள்

1) 'முழுதும் உண்மை'
2) 'ஒரு பொல்லாப்புமில்லை'
3) 'நாமறியோம்'
4) 'எப்பவோ முடிந்த காரியம்'
5) 'சும்மா இரு.'

(சிவதொண்டன் மலரிலிருந்து தொகுத்தவை; நன்றி.)

## மேலும் சில மணிவாக்குகள்

7) 'அஞ்சாதே அஞ்சாதே பஞ்சாய்ப் பறக்கும் பாவம் பஞ்சாட்சரத்தை நெஞ்சில் துஞ்சாதே செபி'
8) 'ஞானயோகம் நாங்கள் புரிந்தால்
மோனவீடு அடைவோம். முழுதும் உண்மையே'
9) செல் – அப்பன் – எங்கள் குருநாதன்
10) 'அப்பனாகிய பரமபிதாவிடம் செல்லுங்கள்
தாமதிக்க வேண்டாம். நல்லதருணம்'

'எவ்வுயிரும் பெருமான் முன்னிலையென்று கருணை செய் கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளார்.' (யோ.சு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமிகளுக்குப் பக்தர்கள் சூடிய பாமாலைகளிற் சில

மண்ணில் வளர்கற் பகதருவே! மகிழும் ஞானப் பெருங்கடலே!
மருவுஞ் சிவமார் பெருவாழ்வே! வளரா நின்ற தவக்குன்றே!
எண்ண வினிய எழிலேறே எவர்க்கு மருள்சிந் தாமணியே!
எளியே னுளத்து ளெழுஞ்சுடரே! ஏத்துமவர்தம் பெரும் பேறே!
கண்ணுண் மணியே யனையவனே! கவினார் பத்தி விளைநிலமே
கருத்துக் கினிய சுவையமுதே! காரே! இனிமெ லொருதாயார்
நண்ணும் முலைப்பா லருந்தாத நம்பா! முத்தந்தருகவே
நகைக்குங் கருணைச் சிவயோக நாதா! முத்தந் தருகவே 1.
(சுவாமி பிள்ளைத்தமிழ். வித்துவான் க கி. நடராசா)

திருவளர்செந் தாமரையென்னத் திகழ்கின்ற முகப்பொலிவும்
அருள்வளருந் திருவாக்கு மடியார்க ளுளங் குளிரக்
கருணைபொழி விழியழகுங் கடையேனை யாட்கொண்ட
பெருமைபெறு நினதருளு மெனதுளத்தின் பெரும் பேறே. 2.
(பண்டிதை பத்மாசனி இராஜேந்திரா)

அன்றொருநாள் வந்தா னருந்தவ ராசன்
இன்பமுடன் நின்றான் எழிற்குரு தேவன்
எண்ணவெண்ண வினிக்கின்ற தவன்திருத் தோற்றம்
சித்தமிரங்கிச் செப்பினான் வார்த்தை;
இருகரங் குவித்தே நின்றே னியானும்;
சிங்கார ரூபன் தந்தானே காட்சி; 3.
(ஸ்ரீமதி சி. அழகர் அம்மையார். மலேசியா)

வாராத சித்தி வருவித் தடியார் மனந்திருத்தித்
தீராத நோய்களுந் தீர்த்தருள் ஞானச் செழுஞ்சுடரே
பாரார் பரவும் பசுந்தாமரைத்தாள் பணியவருள்
கூராய் கொலம்பகம் வாழ்சிவ யோகக் குருமணியே. 4.
(நவாலியூர் சோமசுந்தரப் புலவர்)

கண்டவுட னழைத்துமிளிர் கருணை மொழி
கழறியருள் நோக்கத்தால்
அண்டருக்கு மறிவரிய தவத்திறத்தால்
ஆன்மாவின் நிலையுரைத்து
எண்டிக்கும் ஞானவொளி பரப்பியுயர்
இன்பளித்த யோகசுவாமி
வண்டொலிக்கு மலர்ப்பாத தாமரையை
வழிபடுவோம் வாழ்க நன்றே.
(பிரம்மஸ்ரீ வ.மு. இரத்தினேசுவர ஐயரவர்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை யோகசுவாமி மகளிர் தவநிலையம்
## அறிமுகம்

இலங்கையிற் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் வயோதிப மாதர்களுக்கு அதுவும் சைவப் பெண்மணிகளுக்கு, ஆறுதல் அளிக்கக் கூடிய ஒரு பொது இல்லம் இல்லை. அக்குறையை நீக்குவதற்குச் சுவாமி அம்மா என்று அன்பாக அழைக்கப்படும் செல்வி முத்துப்பிள்ளை சிவகுரு என்பவர் முன்வந்தார். அவர் நல்லூரைப் பிறப்பிடமாகவும், தம் வாழ்நாளிற் பெரும் பகுதியைக் கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்டவர். அவர் ஆசிரியத் தொழிலைத் தன் சீவனத்துக்கு உதவியாகக் கொண்டு உழைத்துவந்ததோடு, தன் வாழ்க்கையைத் துறவு வாழ்க்கையாகவே அர்ப்பணித்துக் கொண்டார். ஆசிரியப் பயிற்சிக் காலத்தில் அக்கலாசாலை அதிபருடன் சேர்ந்து தினமும் யோகசுவாமிகளைத் தரிசித்து உபதேசத்தைப் பெற்றவர். ஆதலின் அவர் தன்னைப் புனிதப்படுத்திக் கொண்டார். அவர் இளமையிலிருந்தே தன்னைத் துறவுக்கே அர்ப்பணித்துக் கொண்டார். ஆசிரியப் பணியையும் பத்து வருட சேவையிற் கைகழுவி விட்டு ஆத்ம ஞானத்திற் தலைப்பட்டார்.

சுவாமியம்மாவுக்குக் கீரிமலையில் ஓர் ஆச்சிரமம் – தவநிலையம் அமைத்துத் தவ விரதங்களையும், பிரார்த்தனை, தியானங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்று சதா ஆவல் இருந்து வந்தது. எனது இல்லத்துக்கு வந்தபோதெல்லாம் தன் கருத்தைக் கூறி நம்மிருவரையும் அவ்வழியில் உதவி கோரி நிற்பார். சுவாமி அம்மாவின் அன்பு வேண்டுகோளை நிறைவு செய்யக் காலமும் வாய்த்து வந்தது.

கீரிமலை நகுலேஸ்வரர் (சிவன் கோவில்) ஆலயத்துக்கு தென் மேற்குத் திசையில் பாதுகாப்பான இடத்தில் ஒரு காணித்துண்டு விலைக்குப் பெற்று 1986-ஆம் ஆண்டு பிற்பகுதியில் சுபமுகூர்த்தத்தில் ஒரு சிறு இல்லமும் அமைத்தோம்' இவ்விடயங்களில் எனது மகனை ஈடுபடுத்திக் கீரிமலை வீரசைவர் திரு. நாகராசா குடும்பத்தினரின் ஆதரவும் பெற்றோம். அவர்களுக்கு நாம் என்றும் நன்றியுடையோம்.

*1987* தைத் திங்கள் *13* ஆம் நாள் (தைப்பொங்கல் தினம்) தவநிலையம் ஒன்றை ஆரம்பித்தோம். அதற்கு நாமஞ் சூட்டும்படி என்னைச் சுவாமி அம்மா பணித்தார்கள். திருவருள் கூட்ட நல் நாள் ஒன்றில் அந்நிலயத்துக்கு 'கீரிமலை யோக சுவாமி மகளிர் தவ நிலையம்' என்று நாமஞ் சூட்டப்பட்டது. பெண்களுக்கென்றே பணி செய்ய உருவாக்கப்பட்டது இத் தவநிலையம். யாழ்ப்பாணத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம சித்தர் பரம்பரையை உருவாக்கக் காரணராயிருந்த சித்தர்களுக்கெல்லாம் நடு நாயகமாகவிருந்த மகானின் பேரில் இந்நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை ஆதரிப்பது ஒவ்வொரு சைவத்தமிழ் மக்களதும் கடமையாகும்.

வயோதிபப் பெண்களுக்கென்று வேறு ஒரு நிலையமும் இல்லை. யோகசுவாமியார் நினைவாக ஒரு நிலையம் உருவாகிப் பணி புரிவதாகக் கேட்டதில்லை. புண்ணிய தீர்த்தக் கரையில் மூர்த்தி, தலம் தீர்த்தம் சிறப்பாக வாய்க்கப் பெற்ற இடம் கீரிமலை. வயது வந்த பெண்கள் வருகை தந்து பிரார்த்தனை, தியானம் செய்து நகுலேஸ்வரத்துக்குத் தொண்டு செய்து அருளைப்பெற இந்நிலையம் வாய்ப்பாக உள்ளது. இந்நிலையத்தில் வசதி உள்ள தனித்த பெண்மணிகள் வந்து சேர்வார்களேயானால் வசதியற்ற ஏனைய தனித்துத் தவிக்கும் பெண்மணிகளையும் அவர்கள் ஆதரிக்க வாய்ப்புண்டு என்பதனைத் தாழ்மையாக அறியத்தருகிறோம். நிதிபடைத்த சைவப் பெருமக்கள் இந்நிலைய வளர்ச்சிக்குதவ வேண்டுகின்றோம்.

**வ. செல்லையா**

கீரிமலை யோகசுவாமி மகளிர்
தவ நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீரிமலை யோகசுவாமி மகளிர் தவ நிலைய வேண்டுகோள்

சைவசமயப் பெருந்தகையீர்!

*1) இந்நிலையம் வயது சென்ற பெண்களுக்கென்றே நிறுவப்பட்டுள்ளது. சென்ற மூன்றாண்டுகளாகச் சாதுக்களின் தினங்களைப் பிரார்த்தனைகள் மூலம் நடாத்தி வருகின்றோம். மேலும் இதனை விஸ்தரித்துத் தவ விரத தியானங்களை நடாத்தவுள்ளோம். இந்நிலையத்துக்கு நீர் வசதியில்லாதது பெருங் குறையாகவுள்ளது. குழாய்க் கிணறு ஒன்றினை அமைத்துத் தந்துதவுமாறு சைவப் பொதுமக்களையும், சைவ நிறுவனங்களையும் வேண்டி நிற்கிறோம்.*

*2) இந்நிலையத்தில் பெண்கள் தங்கியிருந்து தவ விரத, தியானங்களைச் செய்வதற்கு வாய்ப்பாக ஒரு தியான மண்டபம் வேண்டியுள்ளது. இக்கைங்கரியத்தை யார் நினைவாகவும் அமைத்து உதவ முன்வருபவர்களை வரவேற்கிறோம். அரச நன்கொடைகளையோ, வெளிநாட்டுத் தரும நிறுவனங்களின் நன்கொடைகளையோ பெற்றுத்தரவல்லோரையும் வரவேற்கிறோம்.*

*3. (i) சைவசமயம், ஆசார, நற்சீல நல்லொழுக்க நெறிகளை அனுசரித்துத் தங்கள் செலவில் சீவித்துத் தங்களைப் பாதுகாத்துக் கொண்டு, தவத்தைச் செய்யும் வயது சென்ற பெண்மணிகளுக்கு இங்கு இருப்பிட வசதியுண்டு. மௌன விரதத்தைக் கடைப்பிடித்து வாழுதல் பிரமாணமும் பிரதானமும் ஆகும்.*

*(ii) பக்திகூடிய முப்பது வயதுக்கு மேற்பட்ட வறிய பெண் பிள்ளைகள் கன்னியாஸ்திரியாக இருந்து தவஞ்செய்ய விரும்பினால் ஆதரிக்கப்படும். அவர்கள் நிலையக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடப்பேன் என்று உறுதி செய்து கொடுக்க வேண்டும்.*

இங்ஙனம்

கீரிமலை யோகசுவாமி மகளிர் தவநிலைய நிர்வாகம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
*நிர்வாகி, மேழிவாசம்,*
*சித்திரமேழி, இளவாலை,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேஸ்வர மகிமை

இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் ஒரு புண்ணிய தலம் உண்டு. நகுலமுனிவர் கீரிமலையில் சிவபெருமானைப் பூசித்து தீர்த்தமாடி வழிபட்டு பெருந்தவம் செய்து தனது கீரிமுகம் மாறப்பெற்றார். இதனாலேயே இங்குள்ள சிவனுக்கு நகுலேஸ்வரப் பெருமான் என்றும், அம்மைக்கு நகுலாம்பிகை என்றும், இதன் புண்ணிய தீர்த்தத்திற்கு நகுலகிரி தீர்த்தம் என்றும் பெயர் வழங்கலாயிற்று. இதை அறிந்து இந்தியாவிலே உள்ள ஓர் அரசனின் மகள் குதிரை முகத்துடன் பிறந்து இருந்தார். இவ்வரசகுமாரியும் கீரிமலைக்கு வந்து, தவம் செய்து தீர்த்தமாடி குதிரைமுகம் மாறி மனிதமுகம் பெற்றார். இவரின் பெயரால் அருகில் உள்ள புண்ணிய பூமியில் முருகனின் பெயரால் எழுந்த கோயில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் என வழங்கலாயிற்று. அருகில் உள்ள ஓர் கரையில் முருகனின் திருவுருவச் சிலை கொண்டுவந்து இறக்கப்பட்டமையினால் காங்கேசன்துறை என்னும் பெயர் உண்டாயிற்று.

இப்புண்ணிய நகுலகிரி தீர்த்தத்தில் ஆடி அமாவாசை, மகா சிவராத்திரி தினங்களில் பல இடங்களில் இருந்தும் பல அடியார்கள் வந்து தீர்த்தமாடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபட்டு அருள் பெறுகின்றனர். இவ்விடத்தில் கடலின் ஒரு பக்கத்தில் உப்பு நீரும், ஒரு பக்கத்தில் பன்னீர் போன்று சுத்தமான நீரும் சுரந்து தீர்த்தமாக வரும். இவ்விரண்டும் கலக்கின்ற சங்கமம் தீர்த்தமாகும். வைத்திய நிபுணர்களால் கைவிடப்பட்ட நோய்களை மாற்றி சுகப்படுத்தும் தன்மை உடையது. எத்தனையோ அடியவர்கள் இங்கு தீர்த்தமாடி நோய்களை மாற்றி சுகப்படுத்தி தேக சுகத்தையும் மனச் சாந்தியையும் பெற்று பயன் பெறுகின்றார்கள்.

இவ்வாறு பல சிறப்புகளை உடைய புண்ணிய இடத்தில், நல்லூரிலே செல்லப்பா சுவாமியைக் குருவாகக் கொண்ட யோகசுவாமி பெயரால் '' மகளிர் தவ நிலையம் '' என்ற ஓர் ஆச்சிரமம் 13 - 01 - 1987 இல் அமைக்கப்பெற்றது. இவ்வாச்சிரமம் தொடர்ந்து பல ஆத்மிக போதனைகளையும், சமயப் பணிகளையும் சமூகப் பணிகளையும் என்றுபல அரியபணிகளை ஆற்றிவந்தது. பின்பு நாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த போதும், அது அவ்வவ் இடங்களில் எல்லாம் தமது பணியை விடாது செய்து கொண்டு வந்தது.

நாங்கள் இல்லாத காலத்திலும் இந்த அரும்பெரும் தொண்டைச் செய்து யோகசுவாமியார் முக்காலமும் உணர்ந்த ஒரு மகா ஞானி என்பதை உணர்ந்து அவருடைய கருணை மழைக்கு ஆட்பட்டு நன்மை எய்தும்படி இறைவனை மன்றாடுவோம்.

இங்ஙனம்

**சிவகுரு முத்துப்பிள்ளை**

யோக சுவாமி குருகுல இல்லம்

நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஸ்கோ - நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org